கொடிக்கால்பாளையம் - இந்தியாவின், தமிழ்நாடு மாநிலத்தில், திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்டு அமைந்துள்ளது. இந்த சிறிய கிராமம் 2 முனிசிபல் வார்டுகளை கொண்டுள்ளது. இது திருவாரூர் நகரத்தின் வடகிழக்கே அமைந்துள்ளது. இங்கு தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளி போன்ற கல்வி நிறுவனங்களும் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் அமைந்துள்ளன. மேலும் இங்கு வாழ்ந்து வரும் மக்கள் அதிகமாக இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். கொடிக்கால் பாளையத்தில் இரண்டு பெரிய பள்ளிவாசல்களும் மற்றும் பல தர்காக்களும்,மற்றும் பல நீர்நிலைகளும் அமைந்துள்ளன.
கொடிக்கால்பாளையத்திற்கு சுமார் 500 ஆண்டிற்கும் மேலான வரலாறு உள்ளது அதனைப் பற்றி கீழே காண்போம்.



தமிழ்நாட்டில், சோழவள நாட்டை ஆண்டு வந்துள்ள சோழ மன்னர்களில் மனுநீதிச் சோழன் ( கி-மு 206 - 161) மற்றும் குலோத்துங்கச் சோழன் (கி-பி 1070–1120) இருவரும் திருவாரூரை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்து வந்துள்ளனர். இவர்கள் வழி வந்த சோழ மன்னன் ஒருவன் திருவாரூரை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த காலத்தில், நகருக்கு வடக்கு பகுதியில் தனது ஆட்சி கொடியினை நாட்டி அதனை காப்பாதற்காக ஒரு படையினை அங்கு அமைத்து இருந்தான். அந்த இடம் கொடிக்காவல்பாளையம் என அழைக்கப்பட்டது. அது பின்னர் கொடிக்கால்பாளையம் ஆக மருவியது எனக் கூறப்படுகிறது.

நமது முன்னோர்கள் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன், இங்கு குடியேறுவதற்கு முன்பு வெற்றிலை  கொடிக்கால்கள் இருந்ததாகவும், அவற்றில் அவர்கள் வெற்றிலை சாகுபடியை தொழில் முறையில் நடத்தி வந்ததாகவும் தெரிகிறது. அதனால், கொடிக்கால்பாளையம் என்ற பெயர் வந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

திருவாரூரில் நமது முன்னோர்கள் சாலைகார தெருவிற்கும், ஓடம்போக்கி ஆற்றுக்கும் இடைப்பட்ட இடத்தில் வசித்து வந்துள்ளார்கள்.  அப்போது, அவர்களின் அன்றாட கடமையாகிய தொழுகையை நடத்துவதற்கு வசதி படாததால், பல்வேறு ஊர்களுக்கு குடி பெயர்ந்து சென்று விட்டனர்.  ஆனால், எஞ்சியிருந்த 7 குடும்பத்தினர் மட்டும், கிபி 1452 (ஹிஜ்ரி 872) ஆம் ஆண்டு கொடிக்கால் பாளையத்தில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து, பிறகு அருகிலிருந்த கிராமங்களில் இருந்தும் கொடிக்கால் பாளையத்தில் வந்து குடியேறத் தொடங்கினார்கள். தற்போது சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் இங்கு வசித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில், அவர்கள் அதிகமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். பிற்காலத்தில்,  திருவாரூர் நகர பகுதிகளில் சிறு வணிகம் புரிந்தும். மற்றவர்கள் வெளிநாடுகளுக்கும் (சிங்கப்பூர், மலேசியா, புரூணை, பர்மா) வியாபார நிமித்தமாக சென்றனர். அவ்வாறு செல்கின்றபோது சிலர் 17-ம் நூற்றாண்டில் இன்று சிங்கப்பூர் என்று அழைக்கப்படும் அன்றய மலேயா தீபகற்பகத்திற்கு வந்தார்கள்.

கால சூழ்நிலைக்கு ஏற்ப தற்சமயம் உயர்கல்வி கற்று வளைகுடா நாடுகளிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஐரோப்பா மற்றும் சிங்கப்பூர், மலேசியா, புரூணை, ஹாங்காங் போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் குடியேறி குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.